TAMIL CATHOLIC ASSOCIATION OF VICTORIA, AUSTRALIA
விக்டோரியா தமிழ் கத்தோலிக்க சங்கம், ஆஸ்திரேலியா

TCAV

# Messenger
# தூதுவன்

உயிர்ப்பு பெருவிழா மடல்

April 2015



# மலரும் புனிதம்



Wishing TCAV community a very happy Easter!

# JAMES STREET
## MEDICAL CENTRE
## BULK BILING

**Mr. Stephen Sellathurai** CPA.,
**Dr. Anne Sellathurai** M.B.B.S., F.R.A.C.G.P.

11/63 James Street Dandenong VIC 3175
Ph : 03 9793 1962 / Fax : 03 9793 1924
jsmc_anne@hotmail.com



# Joseph Vaz Named Sri Lanka's First Saint: 'Sammana Swami'(Angelic Father) Pretended To Be A Beggar To Avoid Dutch Persecution Of Catholics




Pope Francis blesses the altar during a Mass in Colombo, Sri Lanka, Wednesday, Jan. 14, 2015. He canonized the country's first saint, Joseph Vaz, during the Mass. Reuters




Pope Francis spread a message of unity between Sri Lanka's Sinhalese ethnic majority and Tamil minority by canonizing Joseph Vaz, the country's first saint, and visiting a church revered by Catholics from both groups on Wednesday. Francis used the second day of his six-day tour of Asia to declare Vaz a model of faith for his equal ministering to all people regardless of ethnicity.

"St. Joseph shows us the importance of transcending religious divisions in the service of peace," the pope said in his service delivered in English and then translated for the crowd in both Sinhalese and Tamil. "As the life of St. Joseph Vaz teaches us, genuine worship of God bears fruit not in discrimination, hatred and violence but in respect for the sacredness of life, respect for the dignity and freedom of others, and loving commitment to the welfare of all."



In a country where only 7 percent of 20 million people are Catholics, more than half a million people attended the mass held by Francis in Colombo, Sri Lanka's capital and biggest city, according to theGuardian. Some camped out overnight to ensure a good view for when the pope canonized Sri Lanka's first saint.

After the Mass, the pope traveled north to Madhu to visit Our Lady of Madhu, a church sacred to Catholics across all ethnicities. It was the first visit by a pope to the predominantly Hindu region that contains a large Catholic minority and was at the frontlines of the civil war that spanned three decades between the Sinhalese and the Tamils.

Vaz was born in 1651 in Goa, India, then a Portuguese colony. At 36 years old, he traveled to Sri Lanka, then known as Ceylon and under Dutch control at the time, dressed as a beggar after hearing about the Dutch persecution of Catholics. The Dutch rulers were Protestant Calvinists then. The pope said Vaz spent 23 years secretly ministering to the Catholic population -- dating from earlier Portuguese colonization -- on the island, despite the threat of Dutch persecution.

Vaz was eventually captured and accused of spying, but received protection from the Buddhist king Vimaladharna Surya II, who released him two years later after Vaz is believed to have performed a miracle by ending a drought. The king gave Vaz the freedom to preach in his kingdom, where Vaz was known as "Sammana Swami" or Angelic Father by his congregants.

Under traditional Catholic Church requirements for sainthood, candidates require two miracles to qualify, but the Vatican has never confirmed Vaz to have performed more than one miracle. Apparently, Francis circumvented that requirement and simply approved of Vaz's canonization, which he also did for a far better-known new saint, Pope John XXIII, according to the New York Times. Vaz's canonization is a sign that Francis believes the faithful need more models of holiness without the "technical, time-consuming and costly process of confirming inexplicable miracles," according to the New York Times. Vaz was credited with converting some 30,000 people to Catholicism before he died. The church says Vaz almost single-handedly re-established Catholicism on the island, according to NPR. He is credited as the first non-European native in modern times to found a mission and church outside Europe, and was given the title "Apostle of Kanara and Ceylon." Vaz died in 1711 and was beatified by Pope John Paul II in Colombo in January 1995. (couresty: IBT)

# மலரும் புனிதம்

## குரியாக்கோஸ் எலியாஸ் சாவறா

ஏறக்குறைய இரண்டு கோடி கத்தோலிக்கர் வாழும் இந்தியாவில் (மொத்த மக்கள் தொகை 125 கோடி) அதாவது இந்திய மொத்த மக்கள் தொகையில் ஏறக்குறைய 1.55 விழுக்காடாக உள்ள கத்தோலிக்கர், திரு அவையால் அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்ட சில புனிதர்களையும் அருளாளர்களையும் கொண்டுள்ளனர். சென்னை மயிலையில் கிறிஸ்தவ விசுவாசத்துக்காகக் கொல்லப்பட்ட இயேசுவின் திருத்தூதராகிய புனித தோமையார் தொடங்கி, புனிதர்கள் பிரான்சிஸ் சேவியர், கொன்சாலா கிராசியா, அருளானந்தர், மார்த் அல்போன்சா போன்ற புனிதர்கள் ஏற்கனவே உள்ளனர். அவர்களுடைய வழியில் 2 புதிய புனிதர்கள் சென்ற ஆண்டு பிரகடனப்படுத்தப்பட்டுள்ளனர்.



இதோ அவர்களுடைய சிறிய வரலாறு :

குரியாக்கோஸ் எலியாஸ் சாவறா (10 பிப்ரவரி 1605 - 3 சனவரி 1871) கத்தோலிக்க திருச்சபையில் சீரோ மலபார் வழிபாட்டு முறையைச் சார்ந்தவரும் இந்தியாவின் கேரளா மாநிலத்தில் பிறந்தவரும் ஆவார். இவருக்குத் திருத்தந்தை பிரான்சிஸ் நவம்பர் 23, 2014 கிறிஸ்து அரசர் பெருவிழாவின்போது புனிதர் பட்டம் வழங்கினார்.

இவர் இந்தியாவில் முதன்முறையாகத் தொடங்கப்பட்ட கத்தோலிக்க ஆண் துறவியர் சபையின் நிறுவனர்களுள் ஒருவர் ஆவார். அவர் தொடங்கிய சபை "மாசற்றமரியா கார்மேல் சபை" என்று அழைக்கப்படுகிறது. இது சீரோ மலபார் வழிபாட்டுப் பிரிவின் ஓர் அமைப்பு ஆகும். அச்சபையின் முதல் தலைவராகவும் அவர் பணியாற்றினார். பின்னர் அவர் பெண் துறவியருக்கென்று ஒரு சபையைத் தொடங்கினார். அது கார்மேல் அன்னை சபை என்று அழைக்கப்படுகிறது.

குரியாகோஸ் கத்தனார் சமயத் தறையில் மட்டுமின்றி சமூகத் துறையிலும் சிறந்து விளங்கிய ஒரு சீர்திருத்தர் ஆவார். உயர்ந்த சாதி என்று கருதப்பட்ட பிரிவில் அவர் பிறந்திருந்தாலும் தாழ்ந்த சாதியினர் என்று கருதப்பட்ட மக்களுக்கு கல்வியறிவு வழங்கப்பட வேண்டும் என்று அவர் பாடுபட்டார். 1846ல் அவர் மன்னானத்தில் ஒரு கல்விக்கூடம் தொடங்கினார். சிரிய கத்தோலிக்கரின் தலைவராக இருந்தபோது 1864ல் ஒவ்வொரு கோவிலிலும் (பள்ளி) ஒரு கல்விக்கூடும் தொடங்கி அனைவருக்கும் இலவசக் கல்வி கிடைக்க ஏற்பாடு செய்தார். பள்ளியோடு இணைந்த "கல்விக்கூடம்,பள்ளிக்கூடம்" என்று பெயர்பெற்றது.

குரியாகோஸ் கத்தனார் முயற்சியால் மாணவர்களுக்கு நண்பகல் உணவு வழங்கப்பட்டது. இந்த வழக்கத்தை திருவிதாங்ககூர் அரசும் பின்னர் கேரள அரசும் கடைப்பிடித்தன.

இந்திய கத்தோலிக்க திருச்சபையில் முதன்முறையாக அச்சுக்கூடத்தை ஏற்படுத்தியவர் குரியாக்கோஸ். அது மன்னானத்தில் நிறுவப்பட்டது. அந்த அச்சுக்கூடத்திலிருந்த வெளிவந்த முதல் மலையாளப் பத்திரிகை "தீபிகா"

# மலரும் புனிதம் - தொடர்ச்சி

# யூப்ராசியா எலுவத்திங்கல்

1877ஆம் ஆண்டு அக்டோபர் 7ம் தேதி திருச்சூருக்கு அருகிலுள்ள காட்டூரில் பிறந்த புனித யூப்ராசியா எலுவத்திங்கல் அவர்களின் இயற்பெயர் ரோசா எலுவத்திங்கல். பணக்கார பண்ணையார் குடும்பத்தில் பிறந்த இவர், தனது தாயிடமிருந்து செபமாலை செபிக்கவும், திருப்பலியில் கலந்துக் கொள்ளவும் கற்றுக் கொண்டார்.



இவர் தனது 9வது வயதில் அன்னை மரியாவைக் காட்சியில் கண்டார். இதுவே இவர் திருமணததை விரும்பாமல், துறவு வாழ்வை மேற்கொள்ள காரணமானது. இவர் கன்னியர் வாழ்வைத் தேர்ந்துக் கொள்வதை முதலில் இவரது தந்தை கடுமையாய் எதிர்த்தார். பின்னர் தந்தையின் ஒப்புதலுடன் கார்மேல் சபையில் சேர்ந்தார் ரோசா.

இயேசுவின் திருஇதயத்தின் யூப்ராசியா என்ற பெயரை துறவு சபையில் ஏற்றார். துறவுப் பயிற்சி காலத்தில் இவர் கடும் நோயால் தாக்கப்பட்டார். எனவே இவரை வீட்டுக்கு அனுப்புவதற்குத் துறவு சபை தலைவர்கள் தீர்மானித்தனர். ஆனால் யூப்ராசியாவுக்குத் திருக்குடும்பம் காட்சியளித்தது. அவரின் நோயும் குணமானது. பின்னர் அச்சபையின் பயிற்சியாளர்கள் பொறுப்பாளராக இவர் நியமிக்கப்பட்டார். பின்னர் ஒல்லூர் இல்லத் தலைவரானார். ஆனால், எல்லா வேளைகளிலும், செபத்திலும் திருஇதய பக்தியிலும் ஆழமாக வேரூன்றினார். இவர் அதிக நேரம் சிற்றாலயத்தில் திருநற்கருணை முன்னர் செலவிட்டார். அதோடு அன்னை மரியா மீதும் ஆழ்ந்த பக்தியை வளர்த்தார். இவர் அருட்சகோதரி யூப்ராசியம்மா 1952ஆம் ஆண்டு ஆகஸ்ட் 29ம் தேதி ஒல்லூர் இல்லத்தில் இறந்ததார். அதற்குப் பின்னர் இவரிடம் செபித்த பலர் புதுமைகளைப் பெற்றனர். அதனால் இவரது கல்லறை திருப்பயண இடமாக மாறியது.

## இந்தியாவில் கிறிஸ்தவர்கள் எண்ணிக்கை


மொத்த தொகை - இரண்டரை கோடி கிறிஸ்தவர்கள் (கத்தோலிக்கர், சபைகள் உட்பட) (2.44%)

**தமிழ்நாடு** - 40 லட்சம்(6.6%) கிறிஸ்தவர்கள் (7 கோடி மக்கள் தொகையில்)

**கேரளா** 64 லட்சம் (19%) கிறிஸ்தவர்கள் (3.5 கோடி மக்கள் தொகையில்)

**வடகிழக்கு மாநிலங்களான** மிசோராம், நாகலாந்து, அருணாச்சலப்பிரதேசம், மணிப்பூர் போன்ற இடங்களில் 90% கிறிஸ்தவர்களே ! ஆனால் கேரளாவில் மட்டும்தான் புனிதர்களின் அதிகபட்ச எண்ணிக்கை.

**சிந்திப்போம். நாமும் ஏன் புனிதராகக் கூடாது?**






Blessed Mother Mariam Thresia (1876 - 1926)



Fr. Joseph Thamby, Servant of God, Andhra Pradesh (1883-1945)

தொகுப்பு : அன்ரனி பிரான்சிஸ்

# நில் கவனி செல்...

## TCAV தலைவர் உரை . . .



நிர்மலா அல்போன்சு

ஜென் மார்க்கத்தில் ஓர் கதை உண்டு. எனக்கு மிகவும் பிடித்தக் கதை. நாய்களுக்கான ஓட்டப் பந்தயத்தில் நாய்களை ஊக்குவிக்கும் வகையிலும் ஒரே பாதையில் ஓட வைக்கவும், நாய்களுக்கு முன்னால் ஓர் இயந்திர முயலை ஓட வைப்பார்கள். நாய்கள் அந்த முயலைப் பிடிக்கும் முயற்சியில் வேகமாக ஓடும். ஆனால், ஒருநாளும் அவற்றால் அந்த முயலைப் பிடிக்க இயலாது. காரணம், ஓட்டப்பந்தயக் கண்காணிப்பாளர் நாய்களின் வேகம் அதிகரிக்க முயலின் வேகத்தையும் கூட்டிக் கொண்டே போவார். இதில் கவனிக்கப்பட வேண்டிய மற்றுமொன்று, நாய்களுக்கும், முயலுக்கும் அதிக இடைவெளி இல்லாமலும் பார்த்துக் கொள்வார். இதனால் நாய்களும் எப்படியும் முயலைப் பிடித்துவிடுவோம் என்ற நம்பிக்கையில் ஓடிக் கொண்டே இருக்கும். இப்படியான நாய்களுக்கான ஓட்டப் பந்தயத்தில் Clear Mary என்ற நாய் பலமுறை முதல் பரிசைத் தட்டி சென்றுள்ளது. அதனால் பலரும் அந்த நாயின் மீது பணம் கட்டுவது வழக்கம்.

இப்படியாக ஒருமுறை பந்தயத்தில் முதலாவதாக ஓடி வந்துக் கொண்டிருந்த Clear Mary திடீரென்று நின்று விட்டது. அதன் மீது பணம் கட்டியவர்கள் எல்லோரும் தங்களின் இருக்கையிலிருந்த எழுந்து, "ஓடு, ஓடு" என்றுக் கத்த ஆரம்பித்தனர். **ஒரு நிமிடம் நின்ற** அந்த நாய் முன்னால் ஓடிக் கொண்டிருந்த முயலை அதற்குப் பின்னால் போய் பிடிக்க முயலாமல் வட்டப் பாதையின் தடையைத் தாண்டி குறுக்காக ஓடி எதிர்ப்பக்கத்தில் போய் பிடித்து விட்டது.

இதுதான் கதை. பொதுவாக ஜென் கதைகள் இப்படியாக முடிந்து விடும் நிலையில் நாம் தான் அதிலிருந்த நீதியை உணர்ந்துக் கொள்ள வேண்டும்.

இந்த அவசர வாழ்க்கையில் நாம் எதையோத் தேடி ஓடிக் கொண்டே இருக்கிறோம். எப்பொழுது பார்த்தாலும் ஓட்டம், ஓட்டம், வேகம், வேகம்.

இந்த ஓட்டத்தின் வேகத்தைக் குறைத்து சற்று நேரம் நின்று உண்மையை உணர அழைப்பது தான் தவக்காலம்.

நமது சாயலைக் கண்ணாடியில் பார்த்து நமது ஒப்பனையை சரி செய்துக் கொள்கின்றோம். இதற்கு நாம் கண்ணடி முன்பாக சில நிமிடங்கள் நிற்க வேண்டும். நின்று, கவனமாகப் பார்த்து தான் நம்மை, சரி செய்துக் கொள்ள முடியும்.

இறைவன் மனிதனை படைத்தார். தன் சாயலாகவேப் படைத்தார்.

இறைவன் பரிசுத்தமானவர். அவரது வாயலாகிய நாமும் பரிசுத்தமாக இருந்தால்தான், நம்மை அவருடைய சாயல் என்று நம்மால் சொல்லிக் கொள்ளமுடியும்.

நம்மில் படிந்துள்ள கறைகளை நீக்கி, நம்மை நாமே தூய்மை செய்துக் கொள்ள நமக்குத் தரப்பட்டதுதான் தவக்காலம். ஆபத்தான வளைவுகளில் வைக்கப்பட்டிருக்கும் அறிவிப்புப் பலகை, **நில்** என்பதாகும். இந்தப் பலகையை அலட்சியம் செய்து நிற்காமல் போனால் விளைவுகள் என்னவாக இருக்கும் என்பதை அறிவோம்.

சமீபத்தில் என் மனதைக் கவர்ந்த ஒருப் பாடலின் சில வரிகளோடு என் சிந்தனையை நிறைவுக் செய்கிறேன்.

**"என்னில் வருவதற்காய் உனைத் தேடி வருகின்றேன். உன் சாயல் நானாகவே என் வாசல் வா தெய்வமே "!**

# Kids RETREAT



On Sunday March 8th I attended a children's session organised by the Tamil Catholic Association of Victoria at St Pascal's Seminary in Box Hill.

I arrived at the place in the morning with my mum. Many families had come there. The adults stayed at the church for retreat and the children were taken to a classroom. My mum introduced me to Ms Sasha, a teacher like her. Mum and Ms Sasha had planned lent time activities for children. There were nearly fifteen children in the classroom.



Firstly, we all sat in a circle and told our names and what we like about lent. We got into groups and made a poster of the Stations of the Cross.

After a while we had lunch. There was plenty of food in the hall that people had brought. I ate sandwiches and my favourite food pasta. After lunch, we spent some time outside in the yard playing with Guinea Pigs.

We went back to the classroom. Children in each group had to show their posters to others and speak about the pictures they had drawn. After that, we went outside for an Easter Egg Hunt. We were all waiting for it because we were told in the beginning about it. I found a handful of chocolate eggs.

We went back inside and made some mini rosaries with beads. We used the rosaries to say one 'Our Father' and ten 'Hail Mary' prayers. Then we watched a video called the Prodigal Son. The last activity was Role Play. We were put in groups to discuss a topic. We used the costumes provided to dress up as different characters. As we were doing the Role Play, a man knocked on the door and said it was time for the mass to start. We quickly had icy poles and rushed to the church.

I enjoyed the day! I made new friends. I learnt about the Stations of the Cross and about the rosary. I learnt about love and forgiveness through the story of the Prodigal Son. It was a memorable day!

**- SNEHITA ANTONY**
Grade 5
Holy Name Primary School
Reservoir



# Tune into God!

"I am the vine, you are the branches. The one who abides in me while I abide in him produces much fruit, because apart from me you can do nothing."
John 15:5

**Sometimes we wonder why there is no peace or why there is no contentment or joy or happiness in our lives. We say our prayers; we do trust that God is in control of every situation of our lives. But we forget to check our hearts to see if Jesus Christ, the only Son of God lives there or not! Unfortunately, this very act of God centeredness (heartedness) is getting erased because of our busy schedule or activities in the worldly life. So take a moment to think if God is with us. Is the risen Lord with us or not? If God is with us, the heavenly bliss will fill your hearts and lives.**



**God bless You. Have a wonderful Easter!**

Agal
(from Mothers' Prayer Group)

# கவிதை



நீர் சிந்திய இரத்தம்
நீண்ட கால நினைவுகள்
நான் மனம் வருந்துகிறேன்
நாளை அவர் வருவாரா

காலையில் கதிரவன் – என்
கண்களில் இறை இருதயம்
சிந்திய இரத்தம் சிலுவைக்கு மகிமை
சிந்தனை என்பதில் எங்களின் பாவம்

உண்மையான உத்தமர் நீர்
உள்ளத்தால் நொந்தவர் நாம்
காலமெல்லாம் உம் கல்வாரிப்பலி – நாம்
கண்டும் காணவில்லை உன் திரு முகம்

என் நேரமும் மன்றாடுகிறோம்
என்றென்றும் உம் வரவிற்காக
கல்வாரி என்ற பாதையில்
காண்கிறேன் சிலுவைத் தியாகம்



– அ. அருட்சுதன்

# இந்தியாவில் மதமாற்றம் நடக்கின்றதா?

பா.ஜ.க. ஆட்சிக்கு வந்ததில் இருந்து இந்துத்துவா ஆதரவாளர்கள் கூக்குரல் பெரிதாய் ஒலித்துக் கொண்டிருக்கிறது. அவர்கள் மட்டும்தான் இந்தியர்கள் என்பது போலவும், கிறிஸ்தவர்களும், இஸ்லாமியர்களும் ஏதோ வெளிநாட்டிலிருந்த வந்தது போலவும், அவர்களுக்கு மட்டும்தான் இந்த தேசமும் தேசபக்தியும் சொந்தம் என்பது போலவும்...

இந்தியாவில் உள்ள கிறிஸ்தவர்கள் எல்லோரும் பணத்திற்காக மதம் மாறியவர்கள் என்றும், இப்பொழுதும் பணம் கொடுத்துத்தான் மதம் மாறிக் கொண்டிருப்பதாகவும் ஒரு மாயக் குரல் வந்துக் கொண்டிருக்கிறது. பணம் கொடுத்து, ஒருவனை மதம் மாற்றிவிட முடியும் என்றால், இப்பொழுது உங்கள் கையில்தானே அதிகாரம் இருக்கிறது. இந்தியாவின் கஜானாவே உங்கள் கையில்தானே இருக்கிறது. உங்களிடம்தானே . ஒரு வேளை உடுத்தும் ஒரு ஆடைக்கு 10 இலட்ச ரூபாய் செலவளிக்கும் வகையில் தகுதியுள்ள தொழிலதிபர்கள் நண்பர்களாக இருக்கின்றார்கள்?

பிறகு என்ன தயக்கம்? இருக்கும் பணத்தை அள்ளி வீசி, இந்தியாவில் உள்ள எல்லா கிறிஸ்தவர்களையும், இஸ்லாமியர்களையும் மதம் மாற்றிவிட வேண்டியதுதானே? யார் உங்களை தடை செய்கிறார்கள்? அர்த்தமற்ற வாதங்கள் நிலையற்ற உலகில் ஏன்? ஒரு உதாரணம் சொல்கிறேன். அதன்பிறகு நமது வாதத்திற்குள் வரலாம் நண்பர்களே...

திருநெல்வேலி மாவட்டத்தில் முதன் முதலாக கிறிஸ்தவ ஆலயம் எப்பொழுது எழுப்பப்பட்டது என்று தெரியுமா? 1778ம் ஆண்டில் பாளையங்கோட்டையில் கட்டப்பட்டது. யாரால் கட்டப்பட்டது? க்ளாரிந்தா என்ற அம்மையாரால் கட்டப்பட்டது. க்ளாரிந்தா அம்மையார் என்பவர் யார்? உடனே சொல்லிவிடுவீர்கள். அவர் ஒரு வெளிநாட்டிலிருந்து இந்தியாவிற்குள் வந்த ஒரு மிஷனரி என்று. இல்லை. இல்லவே இல்லை. அவர் தஞ்சாவூர் பகுதியைச் சார்ந்த மிகவும் வைராக்கியமான ஒரு பிராமின் சமூகத்தைச் சார்ந்தவர். இவர் எப்படி கிறிஸ்தவராகியிருக்க முடியும்? பணம் பெற்றுக் கொண்டா கிறிஸ்தவர் ஆனார்? இவருடைய கணவர் மரித்துப் போய்விடுகிறார். கணவனை இழந்த பெண்களுக்குத்தான் உயரிய மரியாதை அளிக்கும் சமூகம்தானே நம் இந்திய சமூகம்?

ஆம். அந்த உயரிய வழக்கத்தின்படியே, அந்தப் பெண்ணை மொட்டையடித்து, வெள்ளையாடை உடுத்தி, கணவின் சிதையில் உடன்கட்டை ஏற்றிக் கொலை செய்வதற்குக் கொண்டு போனார்கள். எவ்வளவு உயர்ந்த பாரம்பரியம் கொண்டது நமது இந்தியா? பெண்களை கீள்ளுக்கீரையாய் கூட அல்ல. அதைவிடவும் கேவலமாக நடத்தியதுதாயே நம் சமூகம்? கணவன் இறந்து போனால் ஏன் பெண்களுக்கு மொட்டையடிக்க வேண்டும்? அவளைப் பார்த்து பிற ஆண்களுக்கு காம உணர்ச்சிகள் வந்துவிடக் கூடாதாம். அவள் முக்காடிட்டுக் கொள்ள வேண்டும். வீட்டில் முடங்கிக் கிடக்க வேண்டும். பிறரது முகத்தில் விழித்துவிடக் கூடாது. உப்பிலாப் பண்டம் சாப்பிட வேண்டும்.

சரி, தலையை மொட்டையடித்து, வெள்ளையாடை உடுத்தியபிறகும், அவள் பிறர் கணகளுக்கு அழகாக தெரிந்தால் என்ன செய்யலாம்? அவளை உயிரோடு எரித்துவிட வேண்டும். உடன்கட்டை ஏறுதல் என்ற பெயரில் இதுதானே வழக்கம்? மனைவியை இழந்த ஆணை என்ன செய்தீர்கள்? அடப்பாவிகளா? இதுதான் தர்மமா?

இந்த காட்சியைக் கண்ட ஆங்கிலேயப் பிரபு ஒருவர் அவளை மீட்டு, காப்பாற்றி திருமணம் செய்து கொள்கிறான். அவன் மூலமாகத்தான் கிறிஸ்தவத்தை அவள் அறிந்துக் கொள்கிறாள். வேதம் வாசிக்க ஆரம்பிக்கிறாள். கிறிஸ்தவப் பெண்ணாக மாறுகிறாள். தன்னைப் போல் வேறு ஒரு பெண்ணிற்கு இந்தப் பூமியில் இப்படி ஒரு சம்பவம் நடக்கக்கூடாத என்று முடிவு செய்கிறார்.

கிறிஸ்தவம் குறித்துப் பிற பெண்களுக்குப் போதிக்க ஆரம்பிக்கிறார். சக மனிதனையும், தன்னைப் போல் நேசிக்க வேண்டும் என்பதை கற்றுக் கொடுக்க ஆரம்பிக்கிறார். பெண்களின் உயிரும் விலை மதிப்பில்லாததுதான் என்பதை மற்றவர்களுக்கு உணர்த்த ஆரம்பிக்கிறார்.

தன் கையிருப்பையெல்லாம் விற்று ஒரு சிறிய கூரை ஆலயத்தைப் பாளையங்கோட்டையில் கட்டி முடிக்கிறார். அதைப் பார்த்து சகித்துக் கொள்ளமுடியாத அவரது சமூகத்தினர் அதை தீயிட்டுக் கொளுத்துகின்றனர். அதன்பிறகு தான் மக்கள் மனதில் ஒரு பெரிய விழிப்புரை வர ஆரம்பிக்கிறது. கிறிஸ்தவம் என்றால் என்ன? ஏன் நாம் அதைப் பின்பற்ற வேண்டும் என்பதை பலரும் தெரிந்து கொள்ள ஆர்வம் காட்டினர். கிறிஸ்தவம் இங்கு வேகமாய் பரவ ஆரம்பித்தது.

இந்த க்ளாரிந்தா ஆலயம் பிறகு செப்பனிடப்பட்டு, தற்போதும் நன்கு பராமரிக்கப்பட்டு வருகிறது. இதன் அருகில்தான் வாஞ்சிநாதனால் சுட்டுக் கொல்லப்பட்ட கலெக்டர் ஆஷ் துரையின் சமாதி இருக்கிறது. அவர் ஏன் கொல்லப்பட்டார் என்பதில் நமக்குச் சொல்லப்பட்டிருப்பதிலும், உண்மைக்கும் வேறுபாடுகள் நிறைய இருக்கிறது. கல்வி நிலையங்கள் ஏராளமாய் ஆரம்பிக்கப்பட்டது. உயர்ந்த ஜாதியின் ஆண்கள் மட்டுமே கற்றுக் கொள்ள வேண்டாம் என்பதைக் கிறிஸ்தவம் கொண்டு வந்தது. நீ தாழ்ந்த ஜாதி என்று பிறர் பேசும்போது, நான் எதில் தாழ்ந்தவன் என்று எதிர் கேள்வி கேட்க அவன் கற்றுக் கொள்ள ஆரம்பித்தான்.

நாடார்களை இந்த சமூகம் மிகவும் இழியவான நிலையில் வைத்திருந்தது. நாடார் குலப் பெண்களை மேலாடை அணியக்கூடாது. தங்கள் மார்புகளை துணியால் மறைக்கவும் கூடாது என்றிருந்ததை நாம் மறக்க முடியுமா? அவர்களுக்கு தைரியம் கொடுத்தது கிறிஸ்தவம், வைக்கம் பெரியாரும்தான். இந்த இழி நிலையைக் கண்டு கொதித்து எழுந்துதான் நாராயணசாமிகள் உருவானார்கள். ஆலயத்திற்குள் மட்டுமல்ல கருவறைக்குள்ளும் நாங்களும் செல்வோம். நாங்களும் தலையில் பரிவட்டம் கட்டுவோம். நாங்களும் பூணூல் அணிவோம் என்று எழுந்தார்கள்.

நாடார்களில் பெரும்பகுதி கிறிஸ்தவர்களாக மாறினார்கள். ஒரு பகுதி நாராயணசாமி வழிபாட்டிற்கு மாறினார்கள். சிலர் சுயம்புவாய் எழும்பியதை இறைவணாக்கி வணங்க ஆரம்பித்தார்கள். **இதில் பணம் எங்கிருந்து வந்தது? மாறியது. மனங்கள்தான்.. மதங்கள் அல்ல.**

**எது. என்னை... சக மனிதனைப் போல வாழவும், பழகவும் தடை செய்கிறதோ... அதைவிட்டு விட்டு, அதிலிருந்து வெளியே வர எது கை கொடுத்ததோ அதை ஆரத் தழுவிக் கொண்டார்கள்.** என் மூதாதையர்கள்.. ஆறுமுகம் நாடார் அதன்பிறகு வைரவன் நாடார்.. அதன் பிறகு வண்ணமுத்து நாடார்.. வண்ணமுத்துதான் என் தாத்தா.

இவைகளில் பாதிக்கப்பட்டு, கிறிஸ்தவ மார்க்கத்தைத் தழுவி ஸ்டீபன் வேதமுத்து என்று கிறிஸ்தவர் ஆனார். தன் கிராமத்தில் உள்ள சொத்தையெல்லாம் விற்று, அருகில் உள்ள ஊருக்கு வந்தார். 1919ல் எல்லோருக்கும் கல்வி கிடைக்க வேண்டும். பிற்படுத்தப்பட்டோரும், தாழ்த்தப்பட்டோரும் கல்வி கற்க வேண்டும் என்பதற்காக திண்ணை பள்ளிக்கூடம் ஆரம்பித்தார்.

இதோ.. 95 ஆண்டுகள் ஆகிறது. இந்த 95 ஆண்டுகளில் எத்தனையோ ஆயிரம் மாணவர்கள் இங்கு கல்வியைப் பெற்றிருக்கின்றார்கள். அதில் யாருக்கென்ன நஷ்டம் வந்துவிட்டது? இன்றைக்கு கிறிஸ்தவ நிறுவனங்கள், இந்தியாவில் இத்தனை எழும்பப் போய்தான் பல

கோடிக்கணக்கான மக்களுக்கு இங்கு கல்வி போய் சேர்ந்திருக்கிறது. தீண்டாமை ஒழிந்திருக்கிறது. உடன்கட்டை போயிருக்கிறது. மனிதனை மனிதனாக மதிக்கும் வழக்கம் வந்திருக்கிறது என்பதை முதலில் புரிந்து கொள்ளுங்கள். மருத்துவமனைகள், முதியோர் இல்லங்கள், சேவை நிலையங்கள், ஆதரவற்றோர் நிலையங்கள் வந்திருக்கிறது. விதவைகள் மறுமணங்கள் பெருகியிருக்கிறது. குறிப்பாய் மேல் ஜாதி வர்க்கத்தின் ஆதிக்கம் பெருமளவு குறைந்திருக்கிறது.





காடுகளாய் காணப்பட்ட இடங்களில் கிறிஸ்தவர்கள் புகைவண்டி தடங்கள் அமைத்தார்கள். கட்டிடங்கள் எழுப்பினார்கள். கல்வி நிலையங்களைக் கட்டினார்கள். அந்த இடங்களைச் சுற்றிப் பிற மனிதர்கள் குடியேற ஆரம்பித்தார்கள். கிறிஸ்தவ நிறுவனங்கள் அதனாலேயே நகரத்தின் மையப் பகுதியானது. இன்றைக்கு அதன் மதிப்பு பல்லாயிரம் கோடிக்கணக்கான மதிப்புடையதாய் மாறிப்போனது. அதற்கு யார் என்ன செய்வது? அய்யோ.. அவர்களிடத்தில் கோடிக்கணக்கான சொத்துக்கள் இருக்கிறதே என்று புலம்புவதில் லாபம் என்ன?

கிறிஸ்தவர்கள் தங்கள் வருமானத்தில் தசம பாகத்தை வலுக்கட்டாயமாய் ஆலயங்களுக்கென்றும், அதன் நிறுவனங்களுக்கென்றும் கொடுத்துப் பழகிவிட்டார்கள். ஆகவே கிறிஸ்தவ நிறுவனங்களுக்குப் பணம் ஒரு பொருட்டல்ல. ஆனால் வெளியிலிருந்து அதைப் பார்த்துகன் கொண்டிருக்கின்றவர்கள், ஆ... இவர்களுக்கு கோடிக்கணக்கில் பணம் வெளிநாட்டிலிருந்து வருகிறது என்று புலம்ப ஆரம்பித்துவிடுகிறார்கள். அதற்கு யார் என்ன செய்வது?

3 தலைமுறையாய் நாங்கள் கிறிஸ்தவர்களாய் இருக்கிறோம். நாங்கள்தான் ஆலயங்களுக்குப் பணம் கொடுக்கிறோமே தவிர... ஒரு பைசா கூட இதுவரை எங்கிருந்தும் வந்ததேயில்லை. எங்கள் உணவிற்கு நாங்கள்தான் உழைக்க வேண்டியதிருக்கிறது. அதுதான் உண்மை. உங்களுக்கு சந்தேகமாய் இருந்தால், நீங்களும் வந்து பாருங்கள்... யார் வேண்டாம் என்றது? தொண்டு நிறுவனங்களுக்கு நன்கொடை கொடுக்கிற வெளிநாட்டு நிறுவனங்கள் பல இருக்கிறது. தர்ம காரியம் செய்யப் போகிறோம், ஏழைகளுக்கு உதவப் போகிறோம், மருத்துவ உதவிகள் செய்யப் போகிறோம் என்று யார் கேட்டாலும் என்று யார் கேட்டாலும் அவர்கள் உதவி செய்வார்கள். கிறிஸ்தவர்கள் என்றில்லை. யார் வேண்டுமானாலும் தொண்டு நிறுவனங்களை ஆரம்பியுங்கள். பதிவு செய்யுங்கள். FCRAல் பதிவு செய்யுங்கள். பெங்களூருவில் சிலர் இருக்கிறார்கள். அவர்களுக்கு நீங்கள் கமிஷன் கொடுத்துவிட்டால் போதும்.. அவர்களே உங்களுக்கு வெளிநாட்டிலிருந்து பணமம் பெற்றுக் தந்து விடுவார்கள். பணம் பெற்றுக் கொண்ட பிறகு நீங்கள் செலவளித்ததற்கு முறையான வவுச்சர் கொடுக்க வேண்டும். அவ்வளவே.

கிறிஸ்தவம் இன்னும் வேகமாய் பரவுகிறதே என்று பொறாமையால் பதறுகிறவர்கள். முதலில் தங்களிடத்தில் காணப்படுகிற குறைகளை சரி செய்து கொள்ளுங்கள். சுடுகாட்டில் கூட பிற ஜாதிப் பிணங்களை அனுமதிக்க மறுக்கிற உங்களுக்கு, மற்றவர்களிடத்தில் குறை காணும் தகுதி எப்படி வந்தது?

உயர்ந்தோர், தாழ்ந்தோர் இல்லை. மேலோர்.. கீழோர்.. என்று எவரும் இல்லை. எல்லோரும் என் மக்களே.. எல்லோருக்கும் எல்லா உரிமையும் உண்டு.. சொல்லிப் பழகுங்கள்... அதுவரை இந்த தேசத்திற்கு க்ளாரிந்தாவும், அன்னை தெரசாக்களும் தேவைப்படத்தான் செய்வார்கள். ஒருவரும் ஒன்றும் செய்வதற்கில்லை !

நன்றி : (முகநூல் பதிப்பு)

# "தெய்வம் தரும் அன்பு !"

அதாவது விதைத்த இடத்தில் மலர்வதும், விளக்கேற்றிய இடத்தில் ஒளிர்வதும், இயற்கையின் நியதி ! இந்த அன்பை மரத்திற்கும், மலருக்கும் ஒளியினுக்கும் ஒப்பிட்டு சொல்வார்கள்.

ரோஜா மலர்களை காண்கின்றோம். அவற்றின் நறுமணத்தை நுகர்கின்றோம். அவற்றின் அழகை ரசிக்கின்றோம். இந்த ரோஜா மலர்கள் தாங்கள் விரும்பிய நபர்களுக்கு மட்டும் நறுமணத்தையும், அழகின் தன்மையையும் வழங்குவதில்லை. மாறாக, அனைவரும் கண்டு பயன்பெறும் பொருட்டு தன்னையே தருகின்றவன. நிழல் தரும் மரங்களைக் காண்கின்றோம். இவை மனிதர் என்றோ, விலங்கினம் என்றோ, உறவென்றோ, பகையென்றோ, உயர்ந்தன - தாழ்ந்தன என்றோ பிரித்து பார்த்து, நிழல் தருவதில்லை. மாறாக, அனைவருக்கும் நிழலின் அருமையை உணர்த்துகின்றன. மரம் வெட்டுகின்ற மனிதருக்கும், தீங்கிழைக்காமல் நிழலைத் தருகின்றது. இதைத் தான் உண்மையான அன்பு என்று கூறுகின்றோம். காரணம், அன்பு பிரித்து பார்க்கும் குணநலன் கொண்டதல்ல. இந்நிலையில் இயேசு தம் தந்ை:தயின் ஆளுமை நலனைப் பற்றி கூறுகிறார். விண்ணகத் தந்தை நல்லோர் மேலும், தீயோர் மேலும் தம் கதிரவனை உதித்தெழச் செய்கிறார். மேலும் மழைப் பெய்யச் செய்கிறார். (மத். 5:45)

எனவே, விண்ணகத்தந்தை நிறைவுள்ளவராய் இருப்பது போல, நாமும் நிறைவுள்ளவராக விளங்க வேண்டும். எந்நாளும் இறையன்பிலும், பிறரன்பிலும் மகிழ்ந்து வாழ்வோம்.



**A.S. ராஜன்,** சென்னை - 34.

நன்றி : கத்தோலிக்கச் சேவை மார்ச் 2015

# மெல்பர்னில் அற்புத குழந்தை இயேசுவின் முதலாம் ஆண்டு திருவிழா








குழந்தை இயேசு என்றாலே உள்ளத்தில் பூரிப்பும், மகழ்ச்சியும் உண்டாகும். எவ்வாறு ஒரு குடும்பத்தில் குழந்தை மகிழ்ச்சியை தருகின்றதோ அதுபோல குழந்தை இயேசு ஒவ்வொரு குடும்பத்திற்கும் சந்தோஷத்தை தரக்கூடியவர். இவரை நம்பி வந்தால் யாரையும் கைவிட மாட்டார். இத்தகைய சிறப்பு வாய்ந்த குழந்தை இயேசுவின் பக்தி முயற்சி எப்பொழுது தோன்றியது தெரியுமா?

### குழந்தை இயேசு திருச்சொரூப பக்தி

பிரேகு நகரக் குழந்தை இயேசுவின் பக்தி, இரு நூற்றாண்டுகளுக்கு மேலாக ஐரோப்பா நாடு எங்கும் பரவியிருந்த ஆரம்ப காலத்தில், குழந்தை இயேசுவின் திருச்சொரூபம் ஸ்பெயின் நாட்டிலிருந்து வந்ததென வரலாறு கூறுகிறது. அரும்பெரும் பரம்பரைச் செல்வமாக தன் குடும்பத்தில் வைத்து பேணிப் பாதுகாத்து வந்த இத்திரு சொரூபத்தை மரிய மோரிக்கெலாரா என்னும் ஸ்பெயின் நாட்டு இளவரசி பொலிக்சேனா லோகோவிட்ஸ் என்ற தன் மகளுக்குத் திருமண பரிசாக அளித்தாள். திருமணத்திற்குப் பின் பொஹிமியாவிலுள்ள தன் கணவனின் இல்லம் செல்லுகையில் இதை அவள் தன்னுடன் எடுத்துச் சென்றாள். கி.பி. 1623ஆம் ஆண்டில் கணவன் மறைந்த பிறகு, எஞ்சிய வாழ்நாட்களை பக்திப் பணியிலும் பிறரன்பு சேவையிலும் கழிக்க உறுதி பூண்டு இளவரசி பொலிக்சேனா பிரேகு நகர கார்மேல் சபை துறவியருக்கு ஈந்த திருச்சொரூபத்தை கொடுத்தாள். கொடுத்தபோது அவள் கூறிய இறை வாக்கு இது : "உலகிலேயே மிக மிக உயர்வாக நான் மதித்துப் போற்றும் தன்னிகரில்லாத தனிப்பெரும் செல்வமான இந்தச் சொரூபத்தை உங்களுக்குக் கொடுக்கிறேன். குழந்தை இயேசுவை மதித்து மகிமைப்படுத்துங்கள். குறை என்பதே இனி உங்களுக்கு இருக்காது" அவளுடைய வாக்கு முற்றிலும் அப்படியே நிறைவேறியது. நன்றியுடன் இச்சொரூபத்தை பெற்றுக் கொண்ட துறவியர், தங்கள் ஆசிரமத்தில் வைத்து செபித்து வந்தனர். அம்மடத்தை இறைவன் ஆசீர்வதித்தார். அச்சபையும் ஆன்ம சரீர நலன்களை நல்ல முன்னேற்றம் கண்டது. உள்ளத்தையும், உடலையும் தொல்லைகள் பல தாக்கிய போதெல்லாம் இத்திருச்சொரூபம் வைக்கப்பட்டிருந்த சிற்றாலயமே அத்துறவியர்க்கு எல்லாம் அடைக்கலமும், ஆறுதலும் அளித்து வந்தது.




### மெல்பர்னில் குழந்தை இயேசு :

ஆண்டவரின் அருள் ஒளியின்றி விலகிய மனிதனை தன் மழலை பருவத்தின் புன்சிரிப்பால் கவர்ந்திழுக்க, நம் மெல்பர்னில் குழந்தை இயேசுவின் திருநாள் வெகுவாக சிறப்பிக்கப்பட்டது.

இவ்வாண்டு பிப்ரவரி முதல் வாரம் சனிக்கிழமையன்று Melbourne Indian Tamil Catholics Commitee of Victoria (MITCCV) என்ற தன்னார்வ அமைப்பின் மூலம் இவ்விழா Keysborough Gaelic Park-ல் நடைப்படுத்தப்பட்டது.

பக்தியுள்ள ஜெபமாலையை தொடர்ந்து, வெகுவிமர்சனையாக கொடியேற்றம் செய்யப்பட்டது. அதைத்தொடர்ந்து, ஆடம்பரத் திருப்பலியும், பிரசித்தி பெற்ற பெங்களூர் விவேக் நகர் குழந்தை இயேசுவின் சொரூப சிறப்பு ஆசீரும் வழங்கப்பட்டது. அடுத்ததாக ஆசீர்வாதமான தேர்பவனி நடைபெற்றது. இறுதியாக விழாக்குழுவின் முயற்சியால் நன்கொடை மூலமும், தன்னார்வ பங்களிப்பின் மூலமும் தயாரிக்கப்பட்ட அறுசுவை உணவு பக்தகோடிகள் அனைவருக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டது.

ஆண்டுதோறும் பிப்ரவரி முதல் சனிக்கிழமை நடத்த எடுக்கப்பட்டுள்ள இம்முடிவு, புலம் பெயர்ந்து வந்துள் நம் அனைவருக்கும் ஒரு வரப்பிரசாதம் என்றே சொல்லவேண்டும். இங்கே வரும் பக்தர்கள் கூறும் சாட்சியங்கள், அவர்களின் வாழ்க்கையில் நடக்கும் புதுமைகளையும், அற்புதங்களையும் கேட்கும் பொழுது நாம் ஆனந்தத்தில் பாடும் ஒரே சரணம் "குழந்தை இயேசுவுக்கே புகழ்"


மரித்தேன் ஆனாலும் இதோ
உயிர்த்தெழுந்தேன்
TCAV உயிர்ப்பின் பெருவிழா
வாழ்த்துக்கள் !